# பேச்சுகள் மூலம் இனப்பிரச்னைக்கு தீர்வு வேண்டும்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மை 63 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 6 இதழ் 155
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21 — 07 — 1993


## எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

(கொழும்பு)

"வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும். இராணுவத் தீர்வு முட்டாள்தனமானது" இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் தெரிவித்தார்கள்.

வடக்கு கிழக்கு பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் தீர்வு காண்பதில் தாமதித்தால் நிலைமை மோசமடையும் என்று எதிர்க்கட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

## விமானக் கொள்வனவிலும் ஊழல் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசினால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட எவ் 7 ரக சுப்பர் சொனிக் விமானங்கள், புக்காரா விமானங்கள் எம். ஐ. 8 ஹெலிகொப்டர்கள் ஆகியவற்றின் கொள்வனவிலும் ஊழல்கள் நடந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானக் கொள்வனவு மற்றும் ஆயுதக் கொள்வனவு போன்றவற்றில் இடம்பெற்ற

(4-ம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் அப்பாவித் தமிழர் தொடர்ந்து படையினரால் கைது

## சிறையிலுள்ளோர் தொகை பற்றி தகவல் தர பொலிஸ் மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கொலையை அடுத்து கொலையாளிகள் வேட்டை என்ற பெயரில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அப்பாவித் தமிழ் பொது மக்கள் பாதுகாப்புப்படையினரால் பரந்த அளவில் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டுவருகின்றனர்.

தென்பகுதியில் தமிழ்மக்கள் போதிலும் தமிழர் அச்சம் படுகிறது.

கல் இருவகையமாக கைதுசெய் எந்தவித கட்டுப்பாடுமின்றி கைதான தமிழர்கள் எதிர்பபடமாட்டார்கள் என அர தொடர்ந்தும் கைதுசெய்யப் தனேபேர் சிறைகூடங்களில் சமூகம் தெரிவித்திருந்த பதிடு வருவதாக தெரிவிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## அனுராவை மீண்டும் கட்சியில் சேர்க்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப் பட்டுள்ள கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவுக்கு கட்சியின் எம். பிக்கள் சிலர் ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

கட்சிக்குள் நிலவும் குடும்பத் தகராறை நிறுத்திவிட்டு திரு. அனுரா பண்டாரநாயக்

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறிமாவுக்கு ஆதரவாக 56எம்.பி.க்கள் கையெழுத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மீது நம்பிக்கை தெரிவித்து, கட்சியின் 56 எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கையெழுத்திட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

(4-ம் பக்கம் பார்க்க)

## செல்வாக்கை சோதிக்க அனுரா நேற்று கூட்டம்

(கொழும்பு)

தமக்கு இருக்கும் ஆதரவை பரிசோதித்துப் பார்க்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப் பட்ட திரு. அனுரா பண்டார நாயக்கா நேற்று கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார்.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த 17 எம். பிக்கள் மாத்திரமே கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## சேவை நீடிப்புக் கோரி படைத்தளபதி விண்ணப்பம்

(கொழும்பு)

விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன பதவியில் தொடர்ந்திருக்க 6 மாத காலச் சேவை நீடிப்புக் கோரியுள்ளாரெனப் பாதுகாப்பு வட்டாரங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் இலங்கையர்கள் ரஷ்யாவில் நிர்க்கதி

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் நாட்டுக்கு செல்லவிருந்த ஆயிரக்கணக்கான இலங்கையர் கடந்த 1 வருடத்திற்கு மேலாக ரஷ்யாவில் அலைந்து திரிவதாக தெரிவிக்கப்படுகிறது.

(2ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் தொடர்கிறது

### ஜெயலலிதா உடல் நிலை கவலைக்கிடம்

(சென்னை)

சென்னையில் காலவரையற்ற உண்ணாவிரதத்தைமேற்கொண்டுவரும் தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் உடல் நிலை மிக பலவீனமடைந்து கவலைக்கிடமான நிலைக்குத்தள்ளப் படுவதாக மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் சுக்ளா சென்னைக்கு விரைவு

(புதுடில்லி)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் உண்ணாவிரதத்தினால் ஏற்பட்டுள்ள சிக்கலை தீர்க்கும் முயற்சியாக பிரதமர் நரசிம்மராவ்-நீர்வள அமைச்சர் சுக்ளாவை சென்னைக்கும் பெங்களூருக்கும் அவசரமாக நேற்று மாலை அனுப்பி

(4ம் பக்கம் பார்க்க)

## அ. தி. மு. க. உறுப்பினர் கைது

(சென்னை)

சென்னை விமானநிலையம்முன்பாக நேற்று மறியல் செய்ய முயன்ற அ. தி. மு. க. தொண்டர்கள் 40 பேர் நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை சென்னையிலுள்ள மத்திய அரசு அலுவலகங்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தை அனுப்ப வாழப்பாடி கோருவார்

(சென்னை)

மத்திய அரசு அலுவலகங்கள் மீது தொடர்ந்தும் அ. தி. மு. க. தொண்டர்கள் தாக்கினால், மத்திய துறை ராணுவப்படையை தமிழகத் திற்கு அனுப்புமாறு தமிழ் நாடு காங்கிரஸ், மத்திய அரசை வேண்டும் நிலை ஏற்படும் என திரு. வாழப்பாடி ராமமூர்த்தி எச்சரித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

## அக்கினி பரீட்சை

(சென்னை)

உண்ணாவிரதமிருக்கும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக 24 வயது இளைஞரொருவர் தனக்குத்தானே நேற்று சென்னையில் தீமூட்டிக் கொண்டார்.

தமிழக முதல்வர் உண்ணாவிரத மிருக்கும் எம். ஜி ஆர்.

(2ம் பக்கம் பார்க்க)

## ரெட்டியின் யோசனை முதல்வரிடம் சமர்ப்பிப்பு

(சென்னை)

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் சென்னைக்கு அனுப்பி வைத்த மத்திய நீர்வளக் கமிஷனின் தலைவர் எம். எஸ். ரெட்டி, காவிரி நீர் சம்பந்தமான பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் திட்டவட்டமான யோசனை ஒன்றை முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## 'லலித்' கட்சிக்குள்ளே அரசியல் பூகம்பம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குள் தற்போது பெரியதொரு பூகம்பம் உருவாகி வருவதாகவும் எந்த நேரத்திலும் வெடித்து கட்சிக்குள் பெரிய பாதிப்பை

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கே துருப்புகளை அனுப்ப விமானப்படை தயார்நிலையில்

(கொழும்பு)

வடக்கே இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை தொடுக்கும் பட்சத்தில் அதனைத் தடுத்துநிறுத்த மேலதிக படையினரைக் கொண்டு செல்ல தற்போது சகல விமானப்படைத் தளங்களிலும் விமானப்படையினரும், யுத்த விமானங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது

தாக்குதல் நடைபெறும்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாடசாலைப் புத்தகங்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், பாடசாலை உபகரணங்கள், O/L, A/L கடந்தகால வினா விடைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம் தினேஸ் புத்தகசாலை, 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (கி-3262)

### இசைக்கருவிகள் தேவை

பழைய இசைக்கருவிகள், கிராமபோன் தேவை பியானோ உட்பட இசைக்கருவிகள் திருத்துபவர். T. கணேசன், பிரதான வீதி, மானிப்பாய் அன்னம்மாள் தேவாலயத்திற்கு அருகாமை. (கி 336)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூதிரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (கி-310)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு-5)

ஆண்டு-5 புலமைப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் புலமைப்பரிசில் மாதிரிவினாத்தாள் 25-07-93 ஞாயிறு வெளியிடப்படும். விடைபரித்துத்தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி-337)

— பெயர் மாற்றம் —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறைவீதி,
— யாழ்ப்பாணம். —

(கி 330)


## வண்ணை தேர்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வர தேவி மஹோற்சவ தேர்த் திருவிழா நாளை வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது அன்றைய நிகழ்வுகள் வருமாறு;

காலை 6-30 மணி வசந்த மண்டபப்பூசை, 9-50 மணிக்கு அம்மன், தேருக்கு எழுந்தருளல் மு. ப. 11-30 மணிக்கு தேர் இருப்பிடம் சேருதல் 12-30 மணிக்கு தேரால் இறங்குதல். -கி

## முதலிடம்

(உடுவில்)

நவாலி கோட்டப் பாடசாலைகளுக்கிடையே ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆங்கிலதினப் போட்டிகளில் ஆண்டு மூன்று முதல் ஐந்து வரையான வகுப்புகளில் நடைபெற்ற 8 நிகழ்ச்சிகளில் 7 நிகழ்ச்சிகளில் நவாலி சென். பீற்றேஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளனர். (109)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து 1993-08-20ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதவி:**
சுகாதாரத் தொழிலாளி (தாழ்தரம்)

**சம்பளத்திட்டம்.**
ரூபா 1775-8x30-2015/ மாதமொன்றுக்கு (இவைதவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச்செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் 18% சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்).

**தகைமைகள்:**
1. மலசல கூடங்கள், வடிகால்கள் முதலிய வற்றைச் சுத்தமான முறையில் பேணுவதில் திறமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
2. வயது - விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**தெரிவு:**
தொழிற்பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

**குறிப்பு:**
உணவு முத்திரை பெற்றுள்ள குடும்ப அங்கத்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/-ஐ நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ தாபனக்கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் விண்ணப்ப படிவங்களைப் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் 32x10 ச. மீ. அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-07-19. (எ-3263)


## இன்று

(யாழ்ப்பாணம்)

செல்லக்கிளி அம்மாள் பாலர் படிப்பக வருடாந்த விளையாட்டுப்போட்டியும் வாலையம்மன் விளையாட்டுக்கழகம் நடாத்திய மென்பந்துக் கிரிக்கெட் போட்டியின் பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப. 2 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் கலந்து கொள்வார்

## வெளிச்ச வீடு சேதம்

(அரியாலை)

பருத்தித்துறை கடற்கரை முனையில் உள்ள வெளிச்ச வீடு கடல் அரிப்பினால் சேதமடைந்துள்ளது. அதனை திருத்தும் நடவடிக்கையில் போரூட் நிறுவனமும் வடமராட்சி வடக்கு கடல் தொழிலாளர் சங்கம் ஆகியன ஈடுபட்டு வருகின்றன. 59

## வயோதிபர் தற்கொலை

(தாளையடி)

நோயின் வேதனை தாங்க முடியாத நிலையில் பளை மாசாரைச் சேர்ந்த திரு. செ. கனகசபை (வயது 61) என்னும் வயோதிபர் தனது வீட்டிலே கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். (193)

## இலவச வகுப்பு

(உடுவில்)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் மாணவர் அமைப்புக் கல்வி வளர்ச்சிக் கழகத்தினரால் நவாலி அரசடி மகாவித்தியாலயத்தில் இரவு நேரங்களில் இலவசமாக வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன. (109)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

(மானிப்பாய்)

வெளிநாடுகளிலுள்ள வேலைவாய்ப்பு வெற்றிடங்களை அறிவதற்கு வசதியாக கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் விசேட கருமபீடமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் வேலைவாய்ப்பு பற்றிய பூரண தகவல்கள் இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. -71

## பயிற்சி வகுப்பு நிறைவுவிழா

(தாளையடி)

வடமராட்சிகிழக்கு மாமுனை செம்பியன் பற்று ஆரம்ப சுகாதார கவனிப்பு தொண்டர்களின் பயிற்சி வகுப்பின் நிறைவுவிழா இம்மாதம் 24-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு செம்பியன்பற்று றோ. க. வித்தியாலயத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளைத் தலைவர் திரு. க. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. -163

## ஓய்வூதிய அடையாள அட்டை

(மானிப்பாய்)

விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய அடையாள அட்டையைப்பெறுவதற்கு 92,93ம் ஆண்டுகளில் விண்ணப்பம் செய்தவர்களின் அடையாள அட்டைகள் செயலக ஓய்வூதிய பிரிவில் உரியவர்களுக்கு வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை நேரில் வந்து பெற்றுச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (71)

# ஆசிரியர்களுக்கான வீடமைப்பு கடன் திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கான வீடமைப்புக் கடன் திட்டம் ஒன்றைத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

கடன் திட்டம் புதிதாக ஒரு வீடு வாங்குவதற்கு, புதிதாக ஒரு வீடு கட்டுவதற்கு வீடு கட்டும் நோக்குடன் காணி ஒன்றை வாங்குவதற்கு குறைபாடாக உள்ள வீட்டைப் பூர்த்தி செய்வதற்கான இலகு கடன் திட்டமாகும்.

மேலதிக விபரங்களை வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபன அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (162-கி)

# வடமாநில பாடசாலைகளின் விபரங்கள் சேகரிப்பு

(உடுவில்)

வடமாநிலத்தில் உள்ள பாடசாலைகள் பற்றிய பூரண விபரக் கணக்கெடுப்பு ஒவ்வொரு கோட்டக் கல்வி அலுவலகங்கள் மூலமாகவும் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் விபரம் பாடசாலைத் தொகைமதிப்பு, ஒவ்வொரு மாணவர்களைப் பற்றிய பூரணமான விபரத் தொகுப்பு ஆகிய விடயங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் தேவைகளுக்காக மட்டுமன்றி எமது பிரதேச தமிழ் மாணவர், ஆசிரியர்களின் எதிர்கால வளர்ச்சி முன்னேற்றம் பயன் கருதி இவ்விபரங்கள் சேகரிக்கப்படுவதால் அதிபர்கள் மிகக் கவனமாக இவ்விபரங்களையும் தரவுகளையும் சேகரித்துக் கொடுக்க வேண்டும் என கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

மருதனார்மடம் கோட்டப் பாடசாலை அதிபர்கள் பூரணமாக்கப்பட்ட விபரக்கொத்துகளை இம்மாதம் 22-ம் திகதி காலை தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அறிவித்துள்ளார். (109)

## உலர் உணவு விநியோகம்

(அரியாலை)

ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச்சங்க கிளைகளில் இடம்பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவு விநியோகம் முத்திரை அடிக்கட்டடையைப் பாவித்து தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. (59)

## பரீட்சை முடிவு

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி வெருடாவில் அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி கோவில் அலங்கார உற்சவத்தினை முன்னிட்டு சரசாலை இந்துமன்றம் ஓர் பொது அறிவுப் பரீட்சையை நடாத்தியது.

இப்பரீட்சையில் எட்டுப் பேர் அதிக புள்ளிகளைப் பெற்றனர். அவர்கள் விபரம் வருமாறு: க. கஜேந்திரன், வீ. நந்தாயினி, ஞ. கோபிநாத், ச. தேமநந்தினி, அ. உமா, அ. மீனலோஜினி, இ. பகீரதன், கி. சிவரூபன். -154

## சைவசமயப் பரீட்சை

(மானிப்பாய்)

கொழும்பு விவேகானந்த சபை அகில இலங்கை ரீதியில் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் பொதுச் செயலாளர், விவேகானந்தசபை, இல 34, விவேகானந்தமேடு, கொழும்பு-13, என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். -71

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரம சார்பில் ஸ்ரீசச்சிதானந்த நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 25-ம் திகதி பி. பகல் 2 மணியளவில் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும்.

திரு. ஆறுமுகம் கந்தையா தலைமையில் இடம்பெறும் மேற்படி விழாவில் சிவத்தமிழ்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சுவாமி சித்ரூபானந்தா, தவத்திரு ஸ்ரீமத் சோமஸ்கந்த வேல் சுவாமிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க)

**அக்கினி**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமாதிக்கு எதிரேயுள்ள சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் தன்மீது மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு இந்த இளைஞர் தீமூட்டிக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

85 வீத எரிகாயங்களுடன் இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (டு)

**ஆயிரம்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பரிதாபநிலைபற்றி கடந்த 8 மாதங்கள் இவர்களுடன் தங்கியிருந்துவிட்டு ஜேர்மனிக்கு செல்ல முடியாமல் திரும்பி வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தகவல் தருகையில், பல இலட்சம் ரூபாவை இங்குள்ள ஏஜென்சிகளுக்குச் செலுத்திவிட்டு அவர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட இவர்கள் ஜேர்மன் எல்லையைக் கடப்பதற்காகரஷ்யாவிலுள்ள லெனின்கிறாட், உக்ரேயின், மொஸ்கோ போன்ற இடங்களில் உண்ண உணவின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றார். (71)


## மாருதி வீடியோ விஷன்

எமது புதிய வெளியீடுகள்

சக்கரை தேவன்
நடிகர்கள்: விஜயகாந், கனகா, செந்தில்
பேண்டு மாஸ்டர்
நடிகர்கள்; சரத்குமார்
ஆத்தா வேப்பிலைக்காரி

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி

(கி-339)

மணிவாக்கு

"என்னுடன் இருப்பவனல்ல இறைவன். ஏற்கனவே நான் இதையே சொன்னேன். மேதினிதன்னில் வேதனை உண்டு. சோதனை நாளில் துணிவுடன் இருங்கள்"

- இயேசுகாவியம்.

# பனை-தெங்குப் பொருட்களின் உற்பத்தியை விஸ்தரிக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

பனை தெங்குப் பொருள் உற்பத்தியை விஸ்தரித்து மக்கள் மத்தியில் இப்பொருள்களுக்கு நல்ல ஆதரவினை வளர்க்கும் முகமாக பனை தென்னை வள அபிவிருத்திப் பிரிவு ஒன்று கூட்டுறவு உதவி ஆணையாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்துள்ளதாவது: இந்தப் பிரிவானது 1972ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் மரவரி முறையில்லாமல் செய்து அதற்குப் பதிலாக தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டு அவற்றினைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் தனியான ஒரு பிரிவாகச் செயல்படுகிறது.

தற்பொழுது கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்திலடங்கிய இதேவகைச் சங்கங்கள் இந்தப் பிரிவின் நிர்வாகத்தின் கீழுள்ளன.

கடந்த இருபது ஆண்டுகளாக இந்தச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் முறையான மேற்பார்வைக்கும் கூட்டுறவுத் திணைக்களம் அதிக முக்கியத்துவம் அளித்து வந்திருக்கிறது. குடாநாட்டின் பொருளாதார வளத்தில் காத்திரமான பங்கினை வகிக்கும் பனை தென்னை வளங்களை முறையாகப் பயன்படுத்துவதோடு நடவடிக்கைகளைச் சரியாக மேற்கொள்வதற்காக செயற்திறனுள்ள ஆளணித் தொகுதி ஒன்றினை நிர்வாக முறைமை பொருத்தமான நிர்வாகிகளும் தளக் கட்டுமானங்களை ஏற்ற வகையில் இணைத்துக் கொள்வதில் இந்தப் பிரிவு தனிக் கவனம் செலுத்துகிறது.

பனை தென்னை வள பொருளாதார முயற்சியில் யாழ்ப்பாணத்து மரபு சமூக அடிப்படையில் குறித்த பகுதியினரே ஈடுபடுவதால் இது சார்ந்த நடவடிக்கைகளில் பெரும் தடங்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கல்வி வளர்ச்சியின்மை நிறுவன செயற்பாட்டு பரிச்சயமின்மை சமூகக் கணிப்புகளும் இப்பணியை மிகுந்த கடினமாக்கியுள்ளது.

இவ்வலுவலகத்தின் பணியானது திணைக்களச் சட்ட விதி என்பனவற்றையும் அரசு மேலாண்மையையும் கைக்கொள்வதற்கப்பால் அபிவிருத்தி அவசியப்படுகின்ற பொருளியல் ரீதியில் வலுக்குறைந்த ஒரு பிரிவினரின் வளர்ச்சிக்காக நிலவுகின்ற அரச நடைமுறைகளுக்குப் புறம்பாக மனித நேயத்துடனும் நேர்மையான வழிமுறைகளுக் கூடாக செயல்படுகிறது. (162-இ)

## தையல் இயந்திர விநியோகம்

(கொழும்புத்துறை)

கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் வரணி, குடமியன், கெற்பேலி, கைதடி, வடக்கு கைதடி, நாவற்குழி ஆகிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தையல் பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இப்பகுதிக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வை. ராஜராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார். (154)

## நமது நோக்கு

### அவருக்குத் தெரிகிறது!

"தமிழர்களுக்கென தனியாக அமைக்க, பல நாடுகளிலே விடுதலைப் போர்கள் நடந்துள்ளன. போர்கள் முடிந்ததும் தனியரசுகள் நடந்ததாகத்தான் வரலாறு கூறுகின்றது. எந்த விடுதலைப்போரும் தோல்வியில் முடிந்ததாகச் சரித்திரம் இல்லை!' இவ்வாறு 'ராவய' வெளியீடு ஒன்றில் சிங்கள அறிஞரான அ. விஜயமான குறிப்பிட்டுள்ளார்.

தனது பட்டத்திற்கு ஒரு பாடமாக வரலாறு படித்தவருக்கு இது புரிகிறது.!

"இராணுவ நடவடிக்கையால் புலிகளைப் பணிய வைக்கலாம் எனச் சில அரசியல்வாதிகளும் பத்திரிகையாளர்களும் அடிக்கடி கூறி வருகிறார்கள். தம்மைச் சுற்றியுள்ள விரிந்த உலகில் தினசரி நடப்பதை அறிந்துகொள்ளாதவர்கள், தமது அறியாமையை வெளிப்படுத்துகிறார்கள்;" - இப்படிக் காரசாரமாக எடுத்தோதியுள்ளார்!

'வீடு கொளுத்தும் இராசாவிற்குக் கொள்ளி கொடுக்கும் மந்திரிபோல, இனவாதத்தைத் தூண்டி ஆடும் அரசியல் வாதிகளுக்கு, உடுக்கை அடித்து வரும் தென்னிலங்கைப் பத்திரிகையாளரின் முகமூடியைக் கிழித்து எறிந்துள்ளார்!

இதைவிட, இலங்கை சிறியநாடு; இதனைத் துண்டாட அனுமதியோம். என்று சிலர் சூளுரைத்து வருகிறார்கள்.

அண்மையிற்கூட, முதலமைச்சர் சந்திரிகாவிற்கு அஸ்கிரிய பீடாதிபதி ஆசி வழங்கும்போது, "மிகச் சிறிய நாடான இலங்கையைத் துண்டு துண்டாகப் பிரிக்கவேண்டிய அவசியமில்லை!" எனத் திருவாய் மலர்ந்து அருளினார்!

"இலங்கை இரு நாடாகப் பிரிக்க முடியாதளவிற்குச் சிறியநாடு என்ற போலிவாதம் உலவுகிறது. அமையப்போகும் தமிழீழத்தைவிட 36 சிறியநாடுகள் ஐ.நா.வில் அங்கம் வகிக்கின்றன. எங்கள் பாடசாலையில் உலகப் புவியியல் கற்பிப்பதில் ஏதோ தவறுகள் உள்ளனபோல் தெரிகிறது!" எனக் கேலியும் கிண்டலுமாகக் கூறியுள்ளார்.

பல நாடுகளின் பரப்பளவுகள், சனத்தொகை ஆகியவற்றை இலங்கையோடு ஒப்பிட்டு, தவறான வாதங்களைத் தவிடுபொடியாக்கி இருக்கிறார், அந்த வரலாற்று அறிஞர்

அவருக்குத் தெரிகிறது; ஏனையோருக்கு விளக்கியிருக்கிறார்; தெளிவு பெறுவார்களா, தென்னிலங்கைத் தலைவர்கள்?

# எட்டு நாட்களுள் கடவுச் சீட்டுக்கள்

(கொழும்பு)

வவுனியாவிலுள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்களக் கிளையில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு எட்டுநாட்களுக்குள் கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களக் கிளை ஆரம்பிக்கப்பட்டு 20 நாட்களில் 51 விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைத்துள்ளதென்றும், திணைக்களம் எதிர்பார்த்த விண்ணப்பங்கள் கிடைக்கவில்லையென்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-இ)

இறைச்சிக்காக

# பசுமாடுகள் வெட்டப்படுவதை தடைசெய்ய வேண்டும்

## மிருக வைத்திய அதிகாரிகள் தீர்மானம்

(உடுவில்)

பசு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதை உடனடியாகத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என யாழ்ப்பாணம் மிருக வைத்திய அதிகாரிகள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மிருக வைத்திய அதிகாரிகள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் இவ்வாறான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கால்நடை வளர்ப்பு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகளினாலும், பொருளாதாரத் தடைகளினாலும், எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் கால்நடைகளுக்குவேண்டிய தீனிவகைகள் வெகுவாகக் குறைந்துள்ளமையினாலும் உணவுக்காகப் பசு மாடுகள் வெட்டப்படுவதனாலும் கால்நடைகள் பெருமளவில் அழிந்துவிட்டன.

கால்நடைகள் அழிந்து, கால்நடை வளர்ப்பில் உற்சாகம் குறைந்துள்ளபோதிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கோழி வளர்ப்புப் பெருமளவு அதிகரித்துக்காணப்படுவதாகவும் அங்கு தெரிவிக்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு நல்லின கால்நடைகளை இங்கு தருவிக்க வேண்டும். 'லிப்கோ' சங்கத்தின் மூலம் இதற்கான கடனுதவியை வழங்கி கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (109-இ)

தென்னாபிரிக்காவில்

## பஸ் பயணிகள் அறுவர் வரிசையாக சுட்டுக் கொலை

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் ஜொகனிஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் பஸ்ஸில் பயணம் செய்த 6 பயணிகள் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டு வரிசையாக நிற்கவைக்கப்பட்டு ஆயுதக்குழு ஒன்றினால் கண்மூடித்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இன்காட்டா கட்சியைச் சேர்ந்தோரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் இது வன்முறைகளை மேலும் வளர்க்கும் எனவும் அக்கட்சி கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளது. (க-இ)

அமெரிக்க

## மத்திய உளவு நிறுவன இயக்குநர் பதவிநீக்கம்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் எஸ்.பி.ஐ. எனப்படும் மத்திய உளவு நிறுவனத்தின் இயக்குனர் வில்லியம் ஹொசற்ஸ் நேற்று முன்தினம் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அரசநிதியை தமது சொந்தச் செலவுக்காக பயன்படுத்தியதற்காகவும் அதிகாரத்துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகவுமே இவர் ஜனாதிபதியில் கிளிங்டனால் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

## இராசி பலன்

21-07-1993

புதன்கிழமை

(தமிழுக்கு ஆடி 06)

துதியை பி. ப. 1-42 வரை; ஆயிலியம் பி. ப. 4-12 வரை மரணயோகம் இராகுகாலம் பகல் 12-01 முதல் 1-31 வரை சுபநேரம் மாலை 4-31 முதல் 6-01 வரை.

மேடம்; புத்திமந்தம் நம்பிக்கை குறைவு செலவு.

இடபம்: மன தைரியம், பணவரவு, பாராட்டு

மிதுனம்: காரிய தடை, மனசங்கடம், அலைச்சல்

கடகம்: சந்தோஷம் தொழில் சிறப்பு, மனைவி பெருமை.

சிங்கம்: சிறுகாயம், விருந்தோம்பல், பயண களைப்பு.

கன்னி: நண்பர் ஆதரவு, புதிய செயல், பொதுப்பணி.

துலாம்: பெரியார் மரியாதை, வேலைப்பளு, வாக்கு வன்மை.

விருச்சிகம்: புத்திரர்குறை, அதிக பிரசங்கம், குடும்பப் பிரிவு

தனுசு: தொழில் நிர்ப்பந்தம், மன உளைச்சல், கடன்.

மகரம்: வீட்டில் சுபகாரியம், வாக்குவன்மை, அயலவர் நன்மை.

கும்பம்: கீழ்ப்படிதல், தொழில் முதலீடு, தெய்வ சிந்தனை.

மீனம்: மனகிலேசம், வழிப்பயம், தொந்தரவு

ஜோஸ்யர்

கிழக்கில்

## தென்னந் தோட்டங்களில் மரநடுகைக்கு மானிய உதவி

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கையிலுள்ள அம்பாறை மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள தென்னந் தோட்டங்களில் மரநடுகை மேற்கொள்வோருக்கு மானிய உதவிகள்வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையை தெங்கு அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளது. ஒரு ஹெக்டர் நிலத்தில் புனர் நடுகை மேற்கொள்வதற்கு 25 ஆயிரம் என்ற அடிப்படையில் இந்த மானிய உதவிகள் கிடைக்கவுள்ளன.

60 வருடங்களுக்கு மேற்பட்ட புதிய தென்னை மரங்கள் உள்ள தென்னந் தோட்டங்களிலே இந்த புனர்நடுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது. தற்பொழுது நாடுபூராவும் 3860 ஏக்கர் தென்னந் தோட்டங்களில் உடனடியாக தென்னை மரநடுகை மேற்கொள்ளப் படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71)

கர்நாடகாவில்

# தமிழருக்கு பலத்த பாதுகாப்பு

(பெங்களூர்)

கர்நாடகாவில் வசிக்கும் தமிழர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கர்நாடக அரசு அறிவித்துள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்டுவரும் உண்ணாவிரதத்தையடுத்து கர்நாடகாவில் வாழும் தமிழர்கள் தாக்கப்படலாம் என்ற அச்சத்திலேயே அவர்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கர்நாடக அரசு தெரிவித்துள்ளது.

கர்நாடகாவில் கடந்த ஆண்டு பெருமளவு தமிழர்கள் தாக்கப்பட்டதும் அகதிகளாக பலர் தமிழ்நாட்டிற்கு வந்ததும் தெரிந்ததே. (க)

# "எம்மை விடுவிக்க அரசு முயலாவிடின் எமது சடலங்களையே கையேற்க நேரிடும்"

## ஜனாதிபதிக்கும், சிறிமாவுக்கும் கைதிகள் கடிதம்

(கொழும்பு)

"எம்மை விடுதலை செய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கையை எடுக்காவிட்டால், எமது சடலங்களைத்தான் அரசாங்கம் பொறுப்பு ஏற்கவேண்டிய நிலை ஏற்படும்" இவ்வாறு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவுக்கும், எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

1990ம் ஆண்டு யூன் மாதம் 16ம் திகதி விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட நாம், கடந்த 3 வருடங்களாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கிறோம்; நாம் விடுதலை அடையவேண்டும் என்ற நோக்குடன், கடந்த 13ம் திகதி, சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தோம். 6வது நாள் எமது பெற்றோர் எம்மைப் பார்க்க வந்தனர். தடைசெய்யப்பட்ட பொருட்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும், எங்கள் அனைவரையும் கொழும்புக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. பொருட்களும் வரவில்லை. நாம் விடுக்கப்படவும் இல்லை.

ஏற்கனவே உண்ணாவிரதம் காரணமாக உடல் நலிவுற்ற நிலையில் இருக்கும் நாம், விரைவில் மரணமடைவோம் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. -ரி

## மோட்டார் ஊர்திகள் உரிமையாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

உடுவில் / கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் தங்களின் ஊர்திகளை கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்கு எடுத்துச் சென்று பரிசோதனைக்குட்படுத்துமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர். (ரி)

## அரசியல் சட்டம், தேர்தல் முறையில் மாற்றம் செய்ய கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அரசியலமைப்பு சட்டத்திலும் தேர்தல் முறையிலும் முற்றுமுழுதான மாற்றங்களை செய்யுமாறு அரசைக் கோரியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி நாடாளுமன்ற ஆட்சி முறையை மீண்டும் கொண்டு வருமாறு சுதந்திரக்கட்சி மேலும் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின் கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

அவ்வப்போது சிறுசிறு மாற்றங்களைச் செய்வதைத்தவிர அரசியலமைப்பு சட்டத்திலும் தேர்தல் முறையிலும் முற்றுமுழுதான மாற்றங்களைச் செய்வது நல்லது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையினால் அளவுக்கதிகமான அதிகாரங்கள் ஒரே இடத்தில் தேக்கமடைந்துவிடுகின்றன. அதனை நிவர்த்தி செய்ய நாடாளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென திரு சேனநாயக்கா மேலும் தெரிவித்தார். (இ)

## குமண, றுகுணு இன்று பருத்தித்துறை வருகின்றன

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு குமணக்கப்பல் நாளைக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் தபால் பொதிகளுடன் 1000 தொன் அரிசி, 660 தொன்சீனி, 100 தொன் பருப்பு, 60 தொன் பாசிப்பயறு உட்பட மற்றும் இதர பொருட்கள் எடுத்துவரப்படுவதாக தெரியவருகிறது.

இதேவேளை றுகுணுகப்பலும் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு அத்தியாவசிய பொருட்களுடன் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (168-120-ரி)

## குமாரி புறப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்கு துறையில் பொருட்களை இறக்கி முடித்த குமாரி கப்பல், இன்று திருமலை செல்கின்றது.

இக்கப்பலில் யாழ். தபால் நிலையங்களிலிருந்து 36 தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படுவதாக யாழ் பிரதம தபாலக உயரதிகாரி தெரிவித்தார். (160-192)

### கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளனர் என பொலிஸார் ரைக் கேட்டால் அவர்கள் அதற்கு பதிலளிக்காது மௌனம் சாதிக்கின்றனர்.

இதேவேளையில் தமிழரைக் கைதுசெய்யும் போர்வையில் அவர்களிடமிருந்து பொலிஸார் பணம் பறிப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ் இளைஞர்களும், இளம் யுவதிகளுமே பெருமளவில் கைதுசெய்யப்பட்டு வருவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து பி. பி. ஸி. நேற்று தெரிவித்ததாவது:

கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றும்புறங்களிலும் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் வகைதொகையின்றி தொடர்ந்தும் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

பாதுகாப்பு சேவையிலுள்ளோர் சோதனையில் ஈடுபடும் போது "நீ சிங்களவரா அல்லது தமிழரா? அதை முதல் சொல்லு" என்று கேள்வி கேட்டு தமிழராயின் அவர் கைதுசெய்யப்படுகிறார்.

அப்பாவிப் பொதுமக்களை மீண்டும் மீண்டும் தடுப்புக் காவலில் வைப்பதை தடுக்க அரசு மேற்கொண்ட சில முயற்சிகளும் பயனற்றுப்போயிற்று.

ஹோட்டல்களை, விடுதிகளை சோதனையிடுவதை பொலிஸார் ஒரு வழக்கமாகவே மாற்றிவிட்டனர். கைது செய்யப்பட்டு காவலில் இருக்கும் இளைஞர் யுவதிகளை, அவர்களின் உறவினர்கள் பொலிஸாரிடமிருந்து மீட்டெடுக்க பணம் கொடுக்கவேண்டிய நிலைமை இருப்பதாகவும் பல குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

திரும்ப திரும்ப விசாரித்த போதிலும் கொழும்பு சிறைகளில் தமிழர் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்ற தகவலை பொலிஸார் இதுவரை தரவில்லை எனினும் சிறைகளில் இருப்போரின் தொகை பல ஆயிரக்கணக்கில் இருக்குமென தமிழ் அரசியல் வாதிகள் கூறியுள்ளனர்.

### விமானக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல்கள், இடைத்தரகர்களின் தரகு விவகாரம், தரமற்ற ஆயுதஇறக்குமதி போன்றகுற்றச்சாட்டுக்களின் உண்மைகளைக் கண்டறிவதற்காக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ரி)

### அமைச்சர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தார்.

கர்நாடக முதலமைச்சர் வீரப்ப மொய்லி, மற்றும் தமிழக ஆளுநரையும் அமைச்சர் சந்தித்து பேச்சு நடத்துவார். செல்வி ஜெயலலிதாவும் பேசக்கூடிய நிலையிலிருந்தால் அவருடனும் அமைச்சர் பேச்சுக்கள் நடத்துவார்.

இதற்கு முன்னர் மத்திய நீர்வளத்துறை ஆணையாளர் எம். எஸ். ரெட்டியையும் சென்னைக்கு பிரதமர் அனுப்பியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (கே-ரி)

### இராணுவத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

அ. தி மு க. தொண்டர்களின் நாசகாரச் செயல்களால் அரசுக்கு 100 கோடி ரூபா இளப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் இன்று பிரதமர் நரசிம்மராவை சந்தித்து தமிழகத்தில் எழுந்துள்ள சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை எடுத்துரைப்பார் எனவும் அவர் செய்தியாளர்களிடம் நேற்று தெரிவித்தார். (கே-ரி)

சிங்களவர்களும் தமிழர்களும் அருகருகே குடியிருக்கிறார்கள், வேலை செய்கிறார்கள். இதனால் தீவிரவாதிகளை தேடும் பணி கடினமான செயலாக இருக்கலாம். இருந்தும் இப்படியாக கைது செய்வது தொடர்வதால் உண்மையில் அப்பாவிப் பொதுமக்களே பாதிக்கப்படுகிறார்கள். (கே-இ-ரி)

### ரெட்டியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யோசனை குறித்து முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமது கருத்தைக் கூறவில்லை என்றும், அவர் தமது அமைச்சரவைச் சகாக்களை கலந்து ஆலோசிக்கக்கூடும் என்றும் ஆளுநர் மாளிகையில் இருந்து வெளியான அறிக்கை கூறுகிறது.

செல்வி ஜெயலலிதாவை நேரில் சந்திக்கத் தமது பாரியாருடன் சென்ற தமிழக ஆளுநர், இந்த யோசனை குறித்த விபரங்களை வெளியிட மறுத்துவிட்டார். -கே-இ

### உண்ணாவிரதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மூன்றாம் நாளாக தனது உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவரும் செல்வி ஜெயலலிதாவின் உடல் சோர்வடைந்து வருவதாகவும் எழுந்து உட்கார முடியாது களைத்துப்போன நிலையில் இருப்பதாகவும் அவரை பரிசோதனை செய்துவரும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

செல்வி ஜெயலலிதாவின் தற்போதைய உடல்நிலையை கருத்திற்கொண்டு அவருடைய நாடித்துடிப்பு, ரத்தஅழுத்தம், இதயத்துடிப்பு போன்றவை தொடர்ந்து கண்காணிக்கப்படவேண்டும் என்றும் அவருக்கு உடனடியாக 'டெக்ஸ்ட்ரோஸ்' ஏற்றப்படவேண்டும் எனவும் அவரைக் கண்காணித்து வரும் மருத்துவர் குழு தெரிவித்துள்ளது. (வி-கே)

### பேச்சுகள் மூலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் அத்தாவுட செனவிரத்ன எச்சரித்தார்.

நாட்டின் பிரச்னைகளுக்கு மாகாணசபை ஒரு தீர்வாக அமையவில்லை என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன கூறினார்.

அடக்கியொடுக்கப்படும் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் அஷ்ரப் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசுக்கு அக்கறையில்லை அரசியல் தீர்வு என்று மட்டும் சொன்னால் போதுமா அதனை நடைமுறையில் காட்டவேண்டும் என்றும் அவர் கூறினார். (ரி)

### சிறிமாவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் இந்த எம். பி.கள் அனைவரும் கட்சியின் ஒழுங்கு விதிகளைப் பேணிப் பாதுகாத்து நடப்பதாகவும் கட்சித் தலைமைக்கு வாக்குறுதி அளித்தனர்.

கட்சியின் ஒழுங்கு விதிகளை மீறி நடக்க முயற்சிப்போருக்கும், கட்சி பிளவுபட நடந்து கொள்ள எத்தனிப்போருக்கும் இது ஒரு பலத்த அடி என அரசியல் அவதானிகள் வர்ணித்துள்ளனர். -இ

### லலித்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தலாம் எனவும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைந்து கொள்வதற்கு கட்சியின் தலைவர் காமினி திஸநாயக்காவும் செயலர் ஜி. எம். பிரேமச்சந்திராவும் விருப்பம் தெரிவித்திருப்பதையடுத்தே இந்த பூகம்பம் உருவாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் ஐ. தே. கவுடன் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு திரு. காமினி திஸநாயக்காவுக்கு சகல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பது ஜ. ஐ. தே முன்னணியைச் சேர்ந்த பலருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ)

### வடக்கே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்களுக்கு மேலதிக துருப்புக்களை அனுப்பி வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு இராணுவ தலைமையகத்திற்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்கள் அனைத்தும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்துள்ளதாக கூறப்படும் இரகசியத் தகவல்களைத் தொடர்ந்தே இந்த முகாம்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதல்களையும் முறியடிக்கும் விதத்தில் விமானப்படையினரையும் உஷார் நிலையில் வைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு விமானப் படைதலைமையகத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது (இ-ரி)

### அ. தி மு. க.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல்களினால் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள சொத்துக்கள் அழிந்துள்ளதாக கூறப்படுகிறது (கே-ரி)

### சேவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

அடுத்த மாதம் 15ம் திகதியுடன் விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன ஓய்வு பெற வேண்டும். அவர் ஓய்வு பெற்றால் புதிய விமானப் படைத் தளபதியாக விமானப் படையின் ஆளணிப் பிரதம அதிகாரியான ஒலிவர் ரணசிங்க பதவி உயர்வு பெற்று நியமிக்கப்படுவார்.

விமானத் தாக்குதல் நடவடிக்கைகளின் தற்போதைய இயக்குநர் அன்ஸிலம் பீரிஸ் விமானப்படையின் ஆளணி பிரதம அதிகாரியாக நியமிக்கப்படுவார்.

வடபகுதி விமானப்படைத் தளபதி ஜெயலத் வீரக்கொடி விமானத்தாக்குதல் நடவடிக்கையின் இயக்குநராக மாற்றப்படவுள்ளார். (ரி)

### அனுராவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காவை மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ளுமாறு இந்த எம்பிக்கள் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருமதி பண்டாரநாயக்கா அவரது மகன் திரு அநுரா பண்டாரநாயக்கா மீதுஎடுத்த இந்த முடிவை அவர் மாற்றிக் கொள்ள வேண்டுமென சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 28 எம். பிக்கள் அவருக்கு கடித மூலம் கோரவுள்ளனர்.

இதேவேளையில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மேலும் 10 எம்பிக்கள் திரு. அநுராவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் சுதந்திரக்கட்சியின் எம் பிக்கள் தொகை 67 என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B